<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி</u>

நாள்: 16.03.2026, அ.வ.எண். 331/2006 , பி.வா.சா.1. பரமசிவம், த/பெ.பழனிச்சாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) வாதிகள் பாகம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் உறவு முறை குறித்து கூறியுள்ள விவரங்கள் சரியா என்றால் சரிதான். தாவா சொத்துகளை எனது அப்பா பாகப்பிரிவினை செய்து சுவாதீனம் எடுத்த போது 1 முதல் 3 வாதிகளும் நானும் சேர்ந்து தான் விவசாயம் செய்து வந்தோம் என்றால் சரிதான். தற்போது வரை தாவா சொத்தின் வருவாய் துறை ஆவணங்கள் எனது அப்பா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து நாளது தேதி வரை எந்த வித பாகப்பிரிவினையும் நடக்காததால் தான் இது நாள் வரை எனது தகப்பனார் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான்

2) எனது அப்பாவின் பெயருக்கு தாவா சொத்துக்கள் பாகத்தின் படி வரும்போது எனக்கு 18 வயது இருக்கும் என்றால் சரிதான். நானும் எனது அண்ணன்கள் சுப்பிரமணி, அருணாச்சலம் படித்துள்ளோம் என்றால் படித்துள்ளோம். எனது அக்கா 3 பேரும் படிக்கவில்லை என்றால் சரிதான். எனது அக்கா மூவரும் பள்ளிக்கு செல்லாமல் எனது அப்பாவுடன் சேர்ந்து விவசாயத்திற்கு உறுதுணையாக இருந்து எங்களை படிக்க வைத்தார்கள் என்றால் எனது அப்பா தான் படிக்கவைத்தார். எனது அப்பாவால் தனியாக காட்டில் வேலை செய்யமுடியாது என்பதால் 1 முதல் 3 வாதிகள் தான் காட்டில் வேலை செய்து எனது அப்பாவிடம் பணத்தை கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி